DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, USILAMPATTI.

Calendar

Miscellaneous Preliminary Register — CASE No.S.T.C.No. 122/17

Sessions

| | |
|---|---|
| Deposition of witness of | : P W - 2 |
| Name | : Rajesh |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.12.18

முதல் விசாரணை:

நான் தற்போது உசிலம்பட்டி கனரா வங்கி கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். புகார்தாரர் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். என்னிடம் காட்டப்படும் புதசாஆ 1 ரூ 3 லட்சத்திற்கான காசோலையை 5.5.2016ல் புகார்தாரர் எங்க்ள் வங்கியில் வசூலுக்கு தாக்கல் செய்துள்ளார். 6.5.2016ம் தேதியில் போதிய பணம் இல்லை என்று இந்த காசோலை திருப்பப்பட்டதாக எங்கள் வங்கியில் குறிப்பாணை புகார்தாரரிடம் வழங்கப்பட்டுள்ளது.

கு.வி.

புகார்தாரர் 22.4.2016 தேதி முதல் எங்கள் வங்கியில் கணக்கு வைத்துள்ளார். 22.4.2016 முதல் 5.5.2016 தேதி வரை புகார்தாரர் அந்த வங்கிக் கணக்கில் ரூ 1000 மட்டுமே செலுத்தியுள்ளார். 300996 என்ற இந்தியன் வங்கி காசோலை ரூ 3 லட்சத்திற்கானது அதுவும் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புதசாஆ 1 காசோலையில் தேதி மற்றும் ராமன் என்ற பெயர் ஒரு மையாலும்

தொகை எண்ணாலும் எழுத்தாலும், கையெழுத்து வேறு ஒரு மையாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் கையெழுத்து வித்தியாசம் உள்ளது. அது திருத்தத்தில் அடங்காது. கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தால் வேறு நபர்கள் காசோலையை பூர்த்தி செய்து தாக்கல் செய்யலாம். ஆனால் காசோலைதாரர் அதை கவனமாக வைத்திருக்க வேண்டும். இந்த வங்கிக் கணக்கை புகார்தாரர் இன்றுவரை பராமரித்து வருகிறார். அந்த வங்கி கணக்கு விபர பட்டியல் எக்ஸ் 1. இந்த வழக்கு காசோலை 27.4.2016ல் முதலில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு 28.4.2016ல் திருப்பப்பட்டது. இந்த காசோலை கிராஸ் செக் இல்லை. 28.4.2016 தேதியில் காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை கொடுக்கப்பட்டுள்ளது. புதசாஆ 2 குறிப்பாணையை புகார்தாரருக்கு என்று வழங்கினோம் என்ற சரியான தேதியில்லை. ஆனால் 10.5.2016 அன்றோ அதற்கு பின்போதான் கொடுக்கப்பட்டுள்ளது. எஸ்எம்எஸ் மூலம் காசோலை திருப்பப்பட்ட விபரம் உடனடியாக புகார்தாரருக்கு தெரிவிக்கப்பட்டிருக்கும்.அவருடைய வங்கி கணக்கிற்கு குறுஞ்செய்தி வசதி உள்ளதா என்று தெரியவில்லை. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த சலான் வங்கியில் உள்ளது. அதை கேட்டால் தாக்கல் செய்யலாம். காசோலையில் குறைபாடுகள் உள்ளதா என்று அதற்குரிய வங்கி கிளையில்தான் பார்ப்பார்கள்.

ம.வி. இல்லை.

/Sd./ Rajesh

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.